# பத்திரிக்கைச்செய்தி

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் ஒன்றாம் வகுப்பு முதல் பி.எச்.டி வரை பயிலும் சிறுபான்மையின மாணவ/மாணவியர்களுக்கு 2016-2017 ஆம் ஆண்டிற்கு பள்ளிப்படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டங்களில் (புதுப்பித்தல் மற்றும் புதியது) ஆன்லைன் மூலம் விண்ணப்பிப்பது தொடர்பாக விளக்கக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரைப்படி விருதுநகர் கே.வி.எஸ்.ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 06.09.2016 அன்று முற்பகல் நடைபெற்றது. இந்த விளக்கக்கூட்டத்தில் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகள்/கல்லூரிகள்/பாலிடெக்னிக்குகள்/ஐ.டி.ஐ களில் பணிபுரியும் கணினி அலுவலர்கள் கலந்து கொண்டனர். விளக்கக்கூட்டத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செ.தனலிங்கம் அவர்கள் சிறுபான்மையினர் கல்வி உதவித்தொகைக்கு www.scholarships.gov.in என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிப்பது குறித்து விளக்கி கூறினார். இது குறித்து திரையின் வாயிலாக ஒளிப்படமாக விளக்கப்பட்டது. மேலும் அவர் கூறியதாவது பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை பெற மாணவ/மாணவியரின் பெற்றோர்/பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமலும், பள்ளிமேற்படிப்பு கல்வி உதவித்தொகை பெற மாணவ/மாணவியரின் பெற்றோர்/பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். மாணவ/மாணவியர் முந்தைய ஆண்டின் இறுதித்தேர்வில் (ஒன்றாம் வகுப்பு நீங்கலாக) 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்று தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை/ஆதிதிராவிடர் நலத்துறை/ மற்றும் இதர துறைகள் / நலவாரியங்கள் மூலம் கல்வி உதவித்தொகை பெறுதல் கூடாது. ஆதார் எண் கண்டிப்பாக குறிப்பிட வேண்டும். 1 முதல் 10 ஆம் வகுப்பு மாணவ/மாணவிகள் புதியது Fresh (ம) புதுப்பித்தல் (Renewal) கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை www.scholarships.gov.in என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பித்த பின் விண்ணப்பத்தை படியிறக்கம் (Download) செய்து 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் 30.09.2016 க்குள்ளும், கல்லூரி மாணவர்கள் 31.10.2016 க்குள் கல்வி நிலையங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

கல்வி நிலையங்கள் மாணவ/மாணவியர்களிடமிருந்து பெற்ற விண்ணப்பங்களைச் சரிபார்த்து ஆன்லைன் மூலம் பார்வேர்டு (Forward) செய்ய வேண்டும். மேலும் தகுதியுள்ள மாணவ/மாணவியரின் பெயர் பட்டியலை உரிய ஒப்பம் இட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு அளிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
விருதுநகர்.

**வெளியீடு : செய்தி மக்கல் தொடர்பு அலுவலகம், விருதுநகர்**